**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 153/2022

நாள்: 15.09.2025

பெயர்: கலியபெருமாள் (**வா.சா.2**) த/பெ: பூமாலை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

இரத்தினம் எனக்கு தாய் மாமன் முறை ஆவார். வாதி, பிரதிவாதி தந்தை இரத்தினம் என்றால் சரிதான். இரத்தினத்தின் அப்பா பெயர் இராமன். இராமனுக்கு பூர்வீக சொத்து என்று எதுவும் இல்லை. எனது வீட்டிற்கு தள்ளி மூன்றாவரு வீடுதான் பிரதிவாதி வீடு உள்ளது. நான் குடியிருந்து வரும் வீடு நத்தம் ஆகும். நத்தத்தில் நான் குடியிருந்து வருவதால் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டது. இராமலிங்கம் 2ஆவது அயிட்ட சொத்தில் குடியிருந்து வருவதால் அவர் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டது. முத்துசாமி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. வாதிகள் எந்த எந்த சர்வே எண் சொத்திற்கு வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி பழனியம்மாள் மாமனார் பெயர் தர்மன். தர்மன் வீட்டில் தான் பழனியம்மாள் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். இராமலிங்கமும் பழனியம்மாளும் பக்கத்து பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகின்றனர். (**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**).

ஒப்பம்/–S.தனலெட்சுமி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.